# கிழக்கிலங்கைத் தேசத்துக்கோயில்களும் நிருவாக முறைமையும்: கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு

# Thesaththu Kovils in Eastern Sri Lanka and their Administrative Systems A Special Reference to Kokkaddichcholai Thanthonreesvaram

Vannamani Gunapalasingham[1]

***Abstract***

*Thesaththu Kovils of Eastern Sri Lanka are deemed to be unique in the Hindu tradition of Sri Lanka. Thesaththu Kovils and Thirupadai Kovils are different in dimensions of their conceptual nature. Kokkaddicholai Thanthonreeswaram is one of the Thesaththu Kovils which embraced the Virasaiva Hindu worship tradition. All traditional aspects, from worship Patterns to administrative maintenance, of Thesaththu Kovils remains intact throughout the history. Objectives of the study are to comparatively view the myths of Kokkaddichcholai Thanthonreesvaram with its history, to illustrate the administrative system and its social settings and to evaluate the appropriateness of the administrative system of the Kovil in the contemporary social situations. As per the normative Hindu Tradition, Thesaththu Kovils are to be based on Hindu customary practices common for all communities. However, Kokkaddichcholai Thanthonreesvaram is based on particular community customary practices. Research Problem of the study is based on this contradictory nature in the customs of this temple. This study is a descriptive research and entirely based on qualitative method. Ethnographic information collected by using case history are primarily used for the study. The administration of the temple is commonly maintained by the matrilineal basis in Thesaththu Kovils of eastern Sri Lanka. The temple administration of Kokkaddichcholai Thanthonreesvaram is dominated by Mukkuvar caste and the office bearers of the temple administration are called as "Vannakar". In Mahon's monarchy, Mukkuvars served as heads of infantry. The Vannakar system has been maintained in the temple administrative system since the Vaaniyar rule in Batticaloa district. The clan system is the important feature in Mukkuvar caste structure. In Kokkaddichcholai Thanthonreesvaram, members form three Mukkuvar clans, namely Ulakipodi clan, Padaiyadchi clan and Kalinga clan, were selected as Vannakars in the temple administration. But, later, other clan members and service community members were selected as Vannakars as to represent their respective communities. The temple administration is comprised of three layers; Kovil administration, Thesha Maha Sabha and Vannakar Group. Vannakar system is organized as the navigating force of the temple administrative hierarchy. It is essential to make reforms in the temple administrative system based the constitution of the temple administration.*

***Keywords****: Eastern Sri Lanka Kokkaddichcholai Thanthonreesvaram, Thesaththu Kovils, Mukkuvar, Thirupadai Kovils, Vannakar system ,*

## அறிமுகம்

இலங்கையில் வழக்கிலுள்ள சமய மரபுகளில் சைவ சமயம் மிகப்பழமையானது. நாகர் கால சாசனங்களும், பண்பாட்டுச்சின்னங்களும், பௌத்த பாளி இலக்கியங்களும், சைவத் திருமுறைகளும் இவற்றினை நிரூபிக்கும் மூலங்களாகும். இராவணன் பற்றிய இதிகாசக் கதைகளும் ஈழத்து சைவ சமயத்தொன்மையினை விபரிக்கும் கதை மூலங்களாகும். இலங்கையின் புராதன சைவக் கோயில்கள் பற்றிய ஆய்வுகளில் பஞ்ச ஈச்சரங்கள் தொடர்பான

[1] Senior Lecturer, Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka. Email: gunapalasingamv@esn.ac.lk

எச்சங்கள் எமக்குக் கிடைக்கும் மிகப்பழமையான சாட்சியங்களாகும். அவற்றிலே திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் துதித்துப் பாடிய திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் முதலிய தலங்கள் மீதான பதிகங்கள், அக்காலத்திலே பிரசித்தமாக விளங்கிய சைவக்கோயில்களை அடையாளப்படுத்துவனவாகும். இலங்கை மீதான சோழப்படையெடுப்புக்கள் இங்கு வழக்கிலிருந்த சைவசமயம், பண்பாட்டு மரபுகளில் பெருமாற்றங்களை உண்டு பண்ணியது எனலாம். குறிப்பாக இலங்கையின் பொலன்னறுவை, திருகோணமலை முதலிய இடங்களில் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களும், அதன் பயனாக தோற்றம் பெற்ற கோயில்களும் மிகுந்த முக்கியத்துவம் உடையனவாகும். யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்திலே வட இலங்கையில் சைவக் கோயில்களின் கட்டுமாணத்திலும், புனர்நிர்மாணத்திலும் ஏற்பட்ட எழுச்சி இலங்கையின் சைவசமய வளர்ச்சியின் முக்கிய திருப்புமுனையாகும். கிழக்கிலங்கையில் சைவக் கோயில்கள் அங்கு வழக்கிலுள்ள சமய நம்பிக்கைகளையும், அதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்களையும் பேணிப் பாதுகாத்த சமுதாய மையங்களாகும். அவற்றிலே தேசத்துக் கோயில்கள் முதன்மையான இடத்தினை வகிப்பவை ஆகும். இக்கோயில்கள் பண்டைக்காலத்தில் மன்னர்களின் சீர்வரிசைகளாலும், தானங்களாலும் வளர்ச்சியடைந்து வந்தவை என்பது குறிப்பிடற்குரியதாகும்.

**ஆய்வு நோக்கங்கள்**

இவ்வாய்வின் நோக்கங்களாக,

1. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் தோற்றம் தொடர்பான ஐதிகங்களை வரலாற்றுடன் ஒப்பு நோக்குதல்,
2. கோயிலின் நிருவாக முறையையும் அதன் சமூகப்பின்னணியையும் அடையாளப்படுத்தல்,
3. தற்கால சூழலில் நிருவாக முறைமையின் பொருத்தப்பாடு பற்றி மதிப்பிடுதல்

என்பன அமைகின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

கோயில்களின் மரபு ரீதியான நியமங்களின் பிரகாரம் தேசத்துக் கோயில்கள் எனப்படுபவை குறிப்பிட்ட பரம்பரைவழிக் குழுக்கள் சார்ந்தது அல்லாமல் தேசத்தின் அனைத்து சமுதாயங்களுக்குமான பாரம்பரிய வழக்காறுகளை உள்ளடக்கியனவாகவே காணப்பட வேண்டும். ஆனால் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் நிருவாகக் கட்டமைப்பு இத்தகைய நியமங்களிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது விபரண ரீதியான கள ஆய்வாக அமைந்துள்ளது. இவ்வாய்வில் பண்பு, தர ரீதியான முறைமையியலே பயன்படுத்தப்பட்டுள்ளது. தேசத்துக் கோயில்கள் தொடர்பாக பயின்று வந்த கருத்துக்களையும், அக்கோயில்களின் நிருவாக முறைமையினையும் இனங்கண்டு விளக்குவதற்குமான இவ்விபரண ஆய்விற்கு கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தை

மையப்படுத்திய விடய வரலாறு (Case History) என்னும் இனக்குழுமவியல் தரவு சேகரித்தல் முறையானது உபயோகிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது பெருமளவிற்கு முதனிலைத் தரவுகளையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு இரண்டாம் நிலைத் தரவுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. முதனிலைத் தரவுகள் இனக்குழுமவியல் சார்ந்த கள ஆய்வின் ஊடாக திரட்டப்பட்ட தர ரீதியான தரவுகளாகவே அமைகின்றது. முதனிலைத் தரவுத் திரட்டலுக்காகப் பிரதான தகவலாளி நேர்காணல், தனிநபர் நேர்காணல், குழுக்கலந்துரையாடல், பங்குபற்றுதல் அவதானிப்பு போன்ற முறைமையியல்கள் கையாளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக, கிழக்கிலங்கையில் தேசத்துக் கோயில்கள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தேசத்துக் கோயில்கள் - திருப்படைக்கோயில்கள்**

கிழக்கிலங்கையில் காணத்தக்க புராதன சைவக் கோயில்களைப் பிரதானமாக நான்கு வகைகளாகப் பகுத்து நோக்க முடியும். அவை,

1. தேசத்துக் கோயில்கள்
2. திருப்படைக் கோயில்கள்
3. மலைக் கோயில்கள்
4. உள்ளூர்க் கோயில்கள்

என்பனவாகும். இக்கோயில்களில் தேசத்துக் கோயில்களும், திருப்படைக் கோயில்களும் மிகுந்த முக்கியத்துவம் உடையனவாகும். இவ்விரண்டு கோயில்களையும் கருத்தியல் ரீதியாக இருவேறு வகையில் வியாக்கியானம் செய்ய முடியும். கிழக்கிலங்கையின் தேசத்துக் கோயில்கள், திருப்படைக்கோயில்கள் என்னும் பகுப்பிலே, திருக்கோணேச்சரம், வெருகல் சித்திரவேலாயுதர் கோயில், சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம், மண்டூர் சந்தசுவாமி கோயில், கோயிற் போரைதீவு சித்திரவேலாயுதர் கோயில், திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில், ஆகிய கோயில்களை அடையாளப்படுத்துவது வழக்கம். அவற்றிலே இரண்டு சிவன் கோயில்கள் ஏனையவை முருகன் கோயில்கள் ஆகும்.

திருப்படைக் கோயில்களுக்கு வி.சி.கந்தையா வரைவிலக்கணம் கூறும் போது, ‘‘கருவறையில் முருகனின் படைக்கலமான வேற்படையை வைத்து வழிபாடு இயற்றப்படுகின்ற கோயில்கள் திருப்படைக் கோயில்கள்’’ எனக் கூறியுள்ளார்.(கந்தையா,வி.சி.,1997:2) மட்டக்களப்புச் சைவக்கோயில்கள் என்ற நூலில் திருப்படைக் கோயில்களாகத் திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில், மண்டூர் முருகன் கோயில், கோவில் போரதீவு சித்திரவேலாயுதர் கோயில், சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில், வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி கோயில் என அடையாளப்படுத்துகின்றார்.

மேலும், அவர் ‘‘பழமையும் பிரசித்தமும் உடைய முருக வழிபாட்டுத் தலங்களைத் திருப்படைக் கோவில்கள்’’ என்று கூறியுள்ளார். பின்னர் கருவறையில் இலிங்கம் தாபனம் செய்யப்பட்டுள்ள கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தையும் திருப்படைக் கோயில்களுக்குள் அடக்குகின்றார். இவற்றிலே கிழக்கிலங்கையிலுள்ள ஐந்து முருகன் கோயில்களும் அடங்குகின்றன. தேசத்துக்கோயில்கள், திருப்படைக்கோயில்கள் பற்றிய வேற்றுமையினை வி.சி கந்தையா சரியாகப் புரிந்து கொள்ளவில்லை

‘‘திருப்படைக் கோயில் அல்லது தேசத்துக் கோயில் என்று அழைக்கப்பட்டு வருபவை மட்டக்களப்பு தேசம் முழுவதிலுமுள்ள பல்வேறு சாதி மக்களுக்கும் உரிமையுள்ள கோயில்கள் எனப்பொருள்படும்’’ என க.மகேஸ்வரலிங்கம் குறிப்பிடுகின்றார். அவர் தனது ‘மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்’ என்னும் நூலில் கோணேசர் கல்வெட்டுப் பாடல் ஒன்றினால் ஏற்பட்ட செல்வாக்கினால் குளக்கோட்டன் திருப்பணி தொடர்பான கல்வெட்டுப்பாடல் பகுதியொன்றிற் குறிப்பிடப்படும் பாடலடியினை மேற்கோள் காட்டித் தேசத்துக்கோயில்களை மேல்வருமாறு கூறுகின்றார்.

‘‘ சீர் மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு
செல்வமும் சிவநேச இருசமயமும்
செப்புதற் கரிதான மாணிக்க கெங்கையும்
செக மேவு கதிர மலையும்

ஏர் பெறும் தென் கயிலை வாழ் கோணலிங்கம்
மேன்மை தான் தோன்றுலிங்கம்
வெற்றி புனை மயூர சித்திர சங்கார வேல்
வெள்ளை நாவற் பதிய தாம்

பேர் பெறும் தென் திருக் கோயில்
சிவாலயம் சிவபூசை தேவாரமும்
செய்முறைகள் என்றென்றும் நீடுழிகாலமும்
தேசம் தளம்பாமலும்

ஏர்பெருகு பரிதி குலராசன்
குளக்கோட்டர் எவ்வுலகுமுய்வதாக
ஏழு கோபுரம் கோயில் தொழுவார் தினம்
தேட எங்கெங்கு மியற்றினாரே’’ (மகேஸ்வரலிங்கம்,க.,2008:97 - 98)

இப்பாடலில் குளக்கோட்ட மன்னனது சேவையைப் பெற்ற ஏழு கோயில்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவை கதிர்காமம்(மாணிக்க கங்கை), செல்லக்கதிர்காமம்(கதிரமலை), திருக்கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம், போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோயில், வெருகல் சித்திரவேலாயுதர் கோயில், திருக்கோயில் சித்திரவேலாயுதர்

கோயில் என்பனவாகும். தேசத்துக் கோயில்கள் என்னும் தொகுப்புக்குள் இக்கோயில்கள் கூறப்பட்டு வருகின்றன என மகேஸ்வரலிங்கம் கூறுகின்றார். இவற்றிலே தென்னிலங்கையிலுள்ள இரண்டு முருகன் கோயில்களையும், கிழக்கிலங்கையிலுள்ள மூன்று முருகன் கோயில்களுமாக மொத்தம் ஐந்து முருகன் கோயில்களையும், கிழக்கிலங்கையிலுள்ள இரண்டு சிவன் கோயில்களையும் சேர்த்துத் தேசத்துக் கோயில்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

இக்கோயில்கள் பற்றி சி.பத்மநாதன் கூறுகையில் ‘‘இவ்விரு கோயில்களும் வெவ்வேறான கருத்தியல்களின் அடிப்படையில் அமைந்துள்ளன’’ எனக் கூறுகின்றார். வேற்படை தாபிக்கப்பட்டுள்ள கோயில்கள் திருப்படைக் கோயில்கள் எனவும், சிவலிங்கம் தாபனம் பண்ணப்பட்டுள்ள கோயில்கள் திருப்படைக் கோயில்களுக்குள் அடங்காதவை: இவை தேசத்துக்கோயில்கள் என்னும் வகைக்குள் அடங்கும் எனவும் கூறுகின்றார். தேசத்துக் கோயில்கள் பற்றிய ஆய்வில் தேசம் என்பது குறித்து நிற்கும் எண்ணக்கரு கவனத்துக்குரியது. தேசம் பற்றி சி. பத்மநாதன் கூறுகையில், ‘‘தேசம் என்பது நாடு என்ற சொல்லுக்குச் சமமானது. ஒரு தேசத்தையும், அதன் ஒரு பகுதியையும், ஒரு குறுநிலப் பிரிவையும் குறிப்பது. தேசம் புவியியற் பரிமாணங் கொண்டது. எல்லைகள் குறித்து அடையாளங் காணப்படக் கூடிய ஒரு நிலப்பகுதியாய் அமைந்தது. அது சில தனித்துவமான வரலாற்று அனுபவங்களால் ஏற்பட்ட சமுதாய உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது. மேலும் அது மொழி வழியாகவும் சமுதாய வழமைகள், பண்பாட்டு அம்சங்கள் என்பனவற்றின் வழியாகவும் உருவாகிய பொதுமையினை உணர்ச்சி பூர்வமாகப் பிரதிபலிப்பது.’’ எனவே தேசம் என்பது இலங்கைத் தமிழரின் அரசியல் நோக்கில் அமைந்த சிந்தனை வளர்ச்சியில் ஒரு பிரதான கட்டமாகும்.(பத்மநாதன்,சி.,2000:13 -14)

கிழக்கிலங்கையில் முற்காலங்களில் தேசம் என்ற சொல்வழக்கு மட்டக்களப்பு, திருகோணமலைத் தமிழர்களிடையே நிலவியது. மட்டக்களப்பு ‘முற்குகதேசம்’ எனவும் அழைக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் முறையிலும், சமுதாய வழமைகளிலும் முக்குவரின் செல்வாக்கு மேலோங்கியிருந்தமையால் ‘முற்குகதேசம்’ என்று சொல்லுவதுண்டு. மட்டக்களப்பு மான்மியத்திற் பெரிய கல்வெட்டுப் பாடல் ஒன்றில் ‘கலிங்க இராசனைக் கண்டு ஆழிசூழிலங்கை தேசமே சிவதலம் திருத்தினை யோவென’(நடராஜா.எப்.எக்ஸ்.சி.,1998:83-84) எனவும், பங்கு கூறும் கல்வெட்டுப் பாடலில் ‘தேசத்திலுயர்வோர் சிவனடி தொழுதெழுவோர்’ (நடராஜா.எப்.எக்ஸ்.சி.,1998: 87)எனவும் தேசம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. வீரக்கோன் முதலியாரால் பாடப்பட்ட வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் என்னும் நூலில் ‘தேசத்து மாநாடு’ பற்றிப் பாடுகின்றார்.(வடிவேல்,இ.,2000: பாடல் 382) இங்கு தேசம் என்னும் சொல்வழக்கு பிராந்தியத்தையும், குறு நிலப்பிரிவையும் குறிப்பதாக அமைந்துள்ளது. எனவே தேசம் என அழைக்கப்பட்ட இப்பிராந்தியத்தில், மன்னர்களின் ஆதரவுடன் வளர்ச்சியடைந்து வந்தவையும், மிகப்பழமை வாய்ந்தவையுமான சிவன், முருகன் கோயில்களே ‘தேசத்துக் கோயில்கள்’ என அழைக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்திலே மட்டக்களப்பிலுள்ள கோயில்களின் வகைப்பாட்டிற்குத் தகுந்தாற்போல் அங்கு பூசை புரியும்

பூசகர்களையும் அழைக்கும் வழக்கம் இருந்தமை ஈண்டு நோக்கத்தக்கது. அதாவது தேசத்துக் கோயில்களில் பூசை புரிபவர்களை தேசத்துக்குருக்கள் எனவும், பகுதிக்கோயில்களில் பூசை புரிபவர்களை பகுதிக்குருக்கள் எனவும், ஊர்க்கோயில்களில் பூசை புரிபவர்களை ஊர்க்குருக்கள் எனவும் வழங்குவது வழக்கமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கு தேசத்துக்கோயில்களில் பூசை புரிவதற்கென தேசத்துக்குருக்கள் நியமிக்கப்பட்டமை மிகுந்த அவதானத்திற்குரியது.

இவர்களது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு திருப்படைக்கோயில்கள், தேசத்துக் கோயில்கள் சம்பந்தமாக ஒரு தெளிவான கருத்தினை முன்வைக்கலாம். இவ்விரு கோயில்களும் வெவ்வேறான எண்ணக்கருக்களை அடிப்படையாக் கொண்டவை. அதாவது தேசத்துக்கோயில் மரபுக்குள் திருப்படைக் கோயில்கள் அடக்கப்படலாம், ஆனால் திருப்படைக் கோயில்களுக்குள் தேசத்துக் கோயில்களை அடக்கமுடியாது. தேசத்துக்கோயில்கள் தேசம் முழுவதற்குமான சிவன், முருகன் கோயில்களைக் குறித்து நிற்க, திருப்படைக் கோயில்கள் தனியே முருகன் கோயில்களைக் குறிப்பனவாகும். வி.சி.கந்தையாவும், க.மகேஸ்வரலிங்கமும் தேசம் குறித்து நின்ற பிராந்திய எல்லைகளிற் கருத்து முரண்பாடு உடையவர்களாகக் காணப்பட்டாலும் இக்கோயில்களின் வகைப்பாட்டில் ஒருமித்த கருத்துடையவர்களாவே காணப்படுகின்றார்கள். எனவே சி.பத்மநாதனின் கருத்து ஏற்புடையதாகின்றது.

**கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரமும் - நிருவாக முறைமையும்**

தேசத்துக் கோயில்களில் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம் முக்கியமான சிவ தலமாகும். மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே 15 கி.மீ தொலைவில், பட்டிப்பளைப் பிரதேச செயலக நிருவாகப் பிரிவில் அமைந்துள்ளது. இக்கோயிலின் தோற்றம் பற்றிய மரபுவழிக்கதை வேடுவர்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. மற்றும் மண்முனையை இராசதானியாகக் கொண்டு அரசாட்சி செய்த உலகநாச்சியால் உருவாக்கப்பட்ட கோயில் இதுவென்பதும் ‘மட்டக்களப்பு பூர்வசரித்திரம்’ தரும் இன்னுமொரு கதையாகும்.(கமலநாதன்,சா.இ.,2005:30) பதின்மூன்றாம் நூற்றாண்டில் மாகோனது ஆட்சிக் காலத்தில் இக்கோயிலில். வீரசைவ வழிபாட்டு மரபுகள், கோயிற்பரிபாலனம், தொண்டுழியங்கள் முதலிய கோயில் வழமைகள் அறிமுகமாகின என்பர்.(தங்கேஸ்வரி,க.,1995:187)

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் நிருவாக முறைமையில் கோயிற் பரிபாலகர்களை வண்ணக்கர் என்னும் மரபுவழியான பெயர் கொண்டு அழைப்பர். இக்கோயிலின் நிருவாக முறைமையும், தொழும்புகளும் மட்டக்களப்பிலே வன்னியரின் ஆட்சி நிலவிய காலம் முதலாக வண்ணக்கர்களின் பொறுப்பிலிருந்தமை புலனாகின்றது. (பத்மநாதன்,சி.,2003:5) கோயில் வழமைகளில் இவர்கள், தாய்வழி மரபில் மருமக்கள் தாயமுறையில் உரிமை பெறுவர். மலையாள முக்குவரின் செல்வாக்கினாலே வண்ணக்கர் முறை வழக்கில் வந்தது எனக்கருத முடிகின்றது. மலையாளத்திலே முக்குவரின் சமயச் சடங்குகளைச் செய்பவர்களை ‘வாணக்கன்’ என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு மிகுந்த அவதானத்திற்குரியது. (பத்மநாதன்,சி.,1994:71)

வண்ணக்கன், வாணக்கன் என்னும் இரு சொற்களின் உருவாக்கத்திலும், ஒலியமைப்பிலும் நெருங்கிய தொடர்பினைக் காணமுடிகின்றது.

இலங்கையில் தமிழர் செறிந்து வாழும் பிராந்தியங்களில் கோயிற் பரிபாலகர்களை வண்ணக்கர் என அழைக்கும் வழக்கம் மட்டக்களப்புத் தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் வழக்கில் இல்லை. கண்டி இராச்சியத்தில் பௌத்த விகாரைகளின் நிருவாகிகளை ‘வண்ணக்கு நிலைமை’ ‘வண்ணக்கு றாளை’ என அழைக்கும் வழக்கம் இருந்திருக்கின்றது. கண்டி இராசதானியின் கீழ் மட்டக்களப்பு ஆட்சி செய்யப்பட்ட காலப்பகுதியில் வண்ணக்கர் என்ற நிருவாக முறைமை மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கு அறிமுகமாகி இருக்கலாம் அல்லது கண்டியிலிருந்து மட்டக்களப்பிற்கு அறிமுகமாகி இருக்கலாம் என்பது பொதுவான அபிப்பிராயம்.(கந்யைா,வி.சி.,1997: 29)

வண்ணக்கன் என்னும் சொல் தென்னிந்திய பிரதேசங்கள் சிலவற்றின் தொடர்புகளையும் நினைவுபடுத்துகின்றன. இச்சொல் ஈரோடு மாவட்டம் ‘அரச்சலூர்’ கல்வெட்டில் காணப்படுகின்றது. இக்கல்வெட்டு பிற்காலத் தமிழ் பிராமி வடிவில் காணப்படுவதுடன், கி.பி.3ஆம் நூற்றாண்டிற்குரியது எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.(Mahadeva,I.,2014:584) அக்கல்வெட்டின் வாசகம்,

“ எழுத்துப் புணருத்தான் மணிய வண்ணக்கன் தேவன் சாத்தன்”

(மயிலை சீனி.வேங்கடசாமி.1989: 57)

என அமைந்துள்ளது. இக்கல்வெட்டைப் படித்த ஐராவதம் மகாதேவன் மணிகளைப் பரிசோதிக்கும் தொழிலை மேற்கொண்டவன் ‘மணிய்வண்ணக்கன்’ எனக்கூறுகின்றார். கொங்கு நாட்டிலே, கொங்கு வேளாளரில் வண்ணக்கர் கோத்திரம் என்ற பிரிவு தற்காலத்திலும் வழக்கிலுள்ளது. வண்ணக்கன் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்கள் எட்டுத் தொகை பாடிய சில புலவர்களின் பெயர்களாகவும் அமைந்துள்ளது. வடம வண்ணக்கன் தாமோதரனார்,( புறம்: 125 பாடல் பாடியவர்) வடம வண்ணக்கன் பெருஞ் சாத்தனார்,(புறம்:172பாடல் பாடியவர்) விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்,(நற்றிணை:298 பாடல் பாடியவர்) வண்ணக்கன் கோமருங்குமரனார்(குறுந்தொகை:85பாடல் பாடியவர்) ஆகியோரைக் குறிப்பிட முடியும்.

வண்ணக்கன் என்னும் சொல்லுக்கு ‘நாணயங்களைப் பரிசோதிப்பவர்’(நர்மதாவின் தமிழ் அகராதி, 2013:785) எனவும், ‘காரிய நிருவாகி’(தமிழ்ப் பேரகரமுதலி, 1920) எனவும் அகராதிகள் பொருள் கூறுகின்றன. வண்ணக்கன் என்னும் சொல்லுக்கு இவற்றினைப் பொருளாகக் கொள்வோமானால், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் நிருவாகப் பொறுப்புக்களை ஏற்று நடாத்துகின்ற கோயில் பரிபாலகர்களைக் குறிக்கும் வண்ணக்கர் என்னும் சொல்லுக்கு அது நிகரானது எனக்கொள்ளமுடியும். எனவே ‘ஐராவதம் மகாதேவன்’ வாசித்து வியாக்கியானம் செய்த பிராமிச்சாசனத்தின் பொருள் இங்கு குறிப்பிடற்குரியது. அவரது கருத்தின் படி மணிகளைப் பரிசோதிப்பவன் வண்ணக்கன் எனக்கொண்டால் அவனை ஏதோ ஒரு நிருவாகப் பதவி வகித்தவனாகக் கொள்ள இடமுண்டு. எனவே தென்னிந்திய செல்வாக்கினாலே

கிழக்கிலங்கைக் கோயில்களில் வண்ணக்கர் முறை வழக்கத்தில் வந்தது எனக் கருதமுடியும். மாகோனது ஆட்சியினால் சிறப்புற்ற இக்கோயில் வண்ணக்கர்களின் கட்டுக்கோப்பான நிருவாக முறைமையால் வளர்ச்சியடைந்தது எனலாம்.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் நிருவாக முறையானது பல நூற்றாண்டுகளாக நிலை பெற்று வந்த வழமைகளை அடிப்படையாகக் கொண்டது. தேசத்து வன்னிமையின் தலைமையில் நிருவாகம் செயற்பட்டு வந்துள்ளது. வன்னியர் என்னும் சொல் தமிழ் வழக்கிலே பல பொருள் குறிக்கும் சொல்லாகும். அந்த வழக்கு தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் பொதுவானது. அது ஒரு சமூகப் பிரிவின் பெயராக வழங்கி வருகின்றது. வன்னியர் என்போர் தமிழகத்தில் சோழ, பாண்டிய, விஜய நகர நாயக்க மன்னர்களின் இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்தோரைக் குறிக்கின்றது.(பத்மநாதன்,சி., 2003:2) ஈழத்திலே வன்னியர்கள் பிரபலமான சிற்றரசர்களாக பதவி வகித்துள்ளார்கள். மட்டக்களப்பு தேசத்திலே மண்முனை, பழுகாமம், சம்மாந்துறை, நாடுகாடு, போரைதீவு, ஏறாவூர் முதலிய பிரிவுகளில் வன்னியர் என்னும் சிற்றரசர்கள் அதிகாரம் பெற்றிருந்தனர்.(பத்மநாதன்,சி., 2003:4) இக்காலப்பகுதியில் தேசத்துக் கோயில்களின் பராமரிப்பு இவர்களது மேற்பார்வையின் கீழே இருந்தது. அந்தவகையில் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் மேலாண்மையில் 1960கள் வரை அவர்களின் செல்வாக்கு காணப்பட்டிருக்கின்றது. தான்தோன்றீச்சரம் பற்றிய கல்வெட்டுப் பாடல்களில் கோயிலுடன் தொடர்பு கொண்டிருந்த குகன் ராச வன்னிமை, பூபால கோத்திர வன்னிமை ஆகியோரின் வம்சாவழியினரின் பெயர்கள் காணத்தக்கன. இவர்கள் கலிங்க வேளாளர்களாக தம்மை அடையாளப்படுத்தியுள்ளனர்.

குகன் இராச வன்னிமையின் சந்ததிகளாக, வெடியரசு கண்டராசா – வாளரசு வென்ற வன்னிமை, வாளரசு கண்டராசா – போர் வீர வென்ற வன்னிமை, தானரசு கண்டராசா – தண்டவாள் முன்னிட்ட வன்னிமை, வண்டவாள் முண்டராசா – முண்ட வன்னிமை, கலிங்கராசா – மொறண்ட வன்னிமை, படையாண்டராசா – அரசு நிலைகாத்த வன்னிமை, மலயாண்டராசா – கொழும்பு வன்னிமை ஆகியோர் காணப்படுகின்றனர். (பத்மநாதன், சி.,1994:34)

பூபாலகோத்திர வன்னிமையின் சந்ததிகளாக, அம்பகப் பண்டார வன்னிமை, செல்லப்பண்டார வன்னிமை, கற்பகப் பண்டார வன்னிமை, கனகரட்ணப் பண்டார வன்னிமை, அழகரட்ணப் பண்டார வன்னிமை, அருணாசல பண்டார வன்னிமை, ஆனந்த பண்டார வன்னிமை ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். (பத்மநாதன், சி.,1994:34)

இப்பெயர்களை கற்பனைப் பாத்திரங்கள் என ஒதுக்கிவிட முடியாது. இவ்விரு வன்னிமைகளின் சந்ததிகளிலும் பூபால கோத்திர வன்னிமையின் சந்ததிகளில் ஒரு ஒழுங்குமுறை காணப்படுகின்றது. அப்பெயர்கள் ஒவ்வொன்றும் இயற்பெயரும், குலப்பெயரும் இணைவு பெற்று காணத்தக்கது. பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்திலே செல்லப்ப பண்டாரம் மட்டக்களப்பு வன்னிபமாக விளங்கியமையை இலங்கை வரலாற்றை எழுதிய 'பிலிப்பூஸ் போல்டே' என்னும் பாதிரியார் மூலமாக அறியப்படும் நம்பகமான ஆதாரமாகும்.(பத்மநாதன், சி.,1994:34)

காலனித்துவ ஆட்சிக் காலத்திலே வன்னிபங்கள் தேச நிருவாகப் பொறுப்புக்களையும், அதிகாரங்களையும் படிப்படியாக இழந்தாலும் ஆலயங்கள் தொடர்பான அவர்களின் மரபு வழியான உரிமை தொடர்ந்து நிலைபெறலாயின. முற்காலத்தில் தேசத்து வன்னிபங்களின் பணிகள் இக்கோயிலில் முதன்மையானதாகக் காணப்பட்டன. காலப்போக்கில் மெல்ல மெல்ல அருகி அவை வழக்கொழிந்து போயின எனலாம்(தேரோட்டம்,1998:41)

ஆரம்ப காலத்தில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் பரிபாலன சபையில் முற்குகக் குடிகளில் காலிங்காகுடி, படையாட்சிகுடி, உலகிப்போடிகுடி ஆகிய குடியினரே வண்ணக்கர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் முறையே தலைவர், செயலாளர், பொருளாளர் என நிருவாகப் பதவியை வகித்தனர். காலத்துக்குக் காலம் கோயில் நிருவாகம், நிதி தொடர்பாக பல குளறுபடிகள் காணப்பட்டன. இதன் காரணமாக 06.08.1930 அன்று நடைபெற்ற தேசமகாசபைப் பொதுக்கூட்டத்தில் வண்ணக்கு நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தனர்.(தேரோட்டம், 1998: 33) இதில் வண்ணக்குமாரை இணைக்காரியதரிசிகளாக வைத்து பரிபாலன சபை பிரதேச வாரியாக உறுப்பினர்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்தமையை அறிய முடிகின்றது. தொடர்ந்து அதுவும் செயலற்றுப் போனதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் மீண்டும் 28.11.1976 ஆம் ஆண்டு தேசமகாசபைப் பொதுக் கூட்டத்தில் கோயிற் பரிபாலனம் தொடர்பாக மீண்டும் ஒரு மாற்றம் செய்யப்பட்டது. (தேரோட்டம், 1998: 33) இவற்றினைக் கருத்திற்கொண்டு கோயிற் பரிபாலனத்திற்கென ஒரு உப விதி தயாரிக்கப்பட்டு 24.09.1978 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசமகாசபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமை புலனாகின்றது.

24.09.1978 ஆம் ஆண்டின் பரிபாலன அமைப்பு விதியின் பிரகாரம் தற்காலம் வழக்கிலுள்ள கோயிலின் நிருவாக முறைமை மூன்று பிரதான கட்டமைப்புக்களை உடையது. அவை வருமாறு,

1. தேசமகாசபை
2. ஆலய நிருவாக சபை
3. வண்ணக்குமார் குழு

**தேசமகாசபை**

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் நிருவாகமுறைமை தொடர்பான அமைப்பு விதிகளில் 4ஆம் விதியின் ‘அ’ பகுதியின் 1ஆம் இலக்கம், ‘ஆ’ பகுதியின் 1,2,3 ஆகிய இலக்கங்களும், 7ஆம் விதியின் 1 – 6 இலக்கங்களும், 8ஆம் விதியின் 1- 6 இலக்கங்களும் தேசமகாசபை பற்றிக் கூறுகின்றன.

அவற்றிலே 4ஆம் விதியின் ‘ஆ’ பகுதியில் 1, 2, 3 ஆகிய இலக்கங்கள் தேசமகாசபையின் அங்கத்துவம் பற்றிய பகுதிகளாகக் காணப்படுகின்றன. அதாவது பண்டு பரவணியாக(பாரம்பரியமாக) தேசமகாசபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்க உரித்துடைய இடங்களிலுள்ள தேசத்துப் பொதுமக்கள் மற்றும் சைவ சமயத்தவர்களாக உள்ளவர்களும், பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களும் தேசமகாசபையில் பங்குபற்றுவதற்கு

உரித்துடையவர்களாவர். இங்கு 4ஆம் விதியின் ‘ஆ’ பகுதியின் 1ஆம் இலக்கத்தில் மறைந்திருக்கும் உட்பொருள் மிகுந்த கவனத்தைப் பெறுகின்றது. அதாவது முற்குகர் எனப்படும் சாதியினரின் பரம்பரையினரையே அது குறித்து நிற்கின்றது. இது தேசமகாசபையின் அதிகாரம் முழுவதும் முற்குகர்களுக்கே உரித்துடையது என்பதை மறைபொருளாகக் காட்டுகின்றது.

மட்டக்களப்பு தேசத்தின் சிற்றரசர்களாகவும், நீதியதிபதிகளாகவும், வன்னிபங்களாகவும், நிலமைகளாகவும், நிலமைப்போடிகளாகவும் இச்சாதியினர் காலத்திற்குக் காலம் அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர்.(கந்தையா,வி.சி., 1997:27) இதனால் மட்டக்களப்பு முற்குக தேசம் எனவும் இத்தேசத்திற்கே உரித்தான நியதிகளின் தொகுப்பினை ‘முற்குகச் சட்டம்’ எனவும் வழங்கி வந்தமை அங்கு குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு தேசத்தின் அரசியல் முறையிலும், சமுதாயவமைப்பிலும், சமய விவகாரங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்த பிரதான மாற்றங்கள் ஏற்பட்ட கால கட்டமாகவே மாகோனது ஆட்சி அமைந்திருந்தது எனலாம். அரசியலில் முற்குகரின் மேலாதிக்கம் ஏற்படலாயிற்று. அவர்களது செல்வாக்கு மேலோங்கியதனால் தாய்வழி மரபிலான மருமக்கள் தாய முறை தேசத்து சமுதாய வழமையாக வலிமை பெற்றது. குடிமுறைமையிலான சமுதாய அமைப்பு உருவாகியது.(பத்மநாதன்,சி., 2000:181) மட்டக்களப்பு தேசத்தவரின் சமுதாயவமைப்பின் தனித்துவத்திற்கு அடிப்படையான குடிமுறை மாகோனால் வகுக்கப் பெற்றது என்பதனை மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தால் அறியமுடிகின்றது.(கமலநாதன்,சா.இ.,2005:65) முற்குகக் குடிகள் ஏழின் பெயரை மட்டக்களப்பு மான்மியத்தின் முற்குகர் வன்னிமை என்ற தலைப்பிலான செய்யுள் ஒன்றிலே,

> “சீர்தங்கு வில்லவரும் பணிக்கனாரும் சிறந்த
> சட்டிலான் தனஞ்சயன்றான்
> கார்தங்கு மாளவன் சங்குபயத்தன் கச்சிலான்குடி
> முற்குகரினமேழேகாண்…” (நடராஜா,எப்.எக்ஸ்.சி,1998:106)

என வருகின்றமை குறிப்பிட்டத்தக்கது. அவற்றிலே வில்லவன்குடி, பணிக்கனார்குடி, சட்டிலான்குடி, தனஞ்சயன்குடி, மாளவன்குடி, சங்குபயத்தன்குடி, கச்சிலாகுடி ஆகிய ஏழு குடிகள் பற்றிய தகவலை அறியமுடிகின்றது. இருப்பினும் தற்கால கோயில் வழமைகளுக்கு உரித்துடைய சில குடிகளின் பெயர்களை இங்கு காணமுடியவில்லை என்பது கவனத்திற்குரியது. அதாவது, தற்காலம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் திருவிழாப் பங்கீட்டிலே உலகிப்போடிகுடி, காலிங்காகுடி, படையாட்சிகுடி, பணிக்கனார்குடி, கச்சிலாகுடி, பெத்தான்குடி, கோப்பிகுடி, சட்டிகுடி, திகடன்குடி,(வேடகுடி) பொன்னாச்சிகுடி(கோயிற்குடி) என பத்துக் குடிகள் உண்டு. இவற்றினை ஒப்பிட்டு நோக்குகையில், மட்டக்களப்பு தேசத்தவரின் குடிமுறைமை பற்றிய மரபுவழிக்கதைகளும், கல்வெட்டுப்பாடல்களும் விரிவான ஆராய்ச்சிக்குரியவை என்பது தெளிவாகின்றது.

தேசமகாசபைக் கூட்டம் கூடுவது தொடர்பாக 7ஆம் விதியின் 1- 5 இலக்கங்கள் குறித்துரைப்பதைக் காணலாம். அவற்றிலே, தேசமகாசபைக் கூட்டங்கள் தேவை ஏற்படும் போது

கூட்டப்படும் எனவும், தலைவரினால், ஆலய நிருவாக சபையினரால், அல்லது தேசமகாசபையின் ஐம்பதுக்குக் குறையாத அங்கத்தவர்கள் கூட்டத்தைக் கூட்டுதற்கான காரணத்தை தெளிவாகக் குறிப்பிட்டு கேட்டுக் கொள்ளும் போது காரியதரிசி கூட்டத்தைக் கூட்டுவார் எனக் கூறப்படுகின்றது. தேசமகாசபையின் வருடாந்த பொதுக்கூட்டம் ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதத்தில் கூட்டப்பட வேண்டும் என்பது கட்டாயமான நியதியாகும். கூட்டத்துக்கு பதினான்கு நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் கொடுக்க வேண்டும் எனவும், தலைவர் சமூகந்தராதவிடத்து தேசமகாசபையில் தற்காலிக தலைவர் ஒருவரைத் தெரிவு செய்து கூட்டம் நடாத்தப்படலாம் எனவும் கூறப்படுகின்றது. அத்துடன் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது நாற்பது(40) உறுப்பினர்கள் சமுகமளிக்க வேண்டும் எனவும், அவற்றிலே திருவிழா நடாத்தும் குடியினரில் நான்கு குடியினரும் வண்ணக்குமாரில் இருவராவது சமுகமளிக்க வேண்டும் என்பது விதிமுறையாகும். இவைகள் இல்லாத பட்சத்தில் தேசமகாசபைக் கூட்டம் கூடமுடியாது என்னும் வரையறையும் விதிக்கப்பட்டுள்ளது.

பரிபாலன சபை அமைப்பு விதியில் 7ஆம் விதியின் 6 இலக்கம் தேசமகாசபையின் நிதியாண்டு பற்றியதாகும். அதாவது தேசமகாசபையின் நிதியாண்டு ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதம் தொடக்கம் அடுத்துவரும் சித்திரை மாதம் முடியவுள்ளதாக இருக்கும். தேசமகாசபையின் கூட்டங்களும், நிதியாண்டும் நவீன கால நிறுவன ரீதியான சிந்தனைகளை உள்வாங்கியனவாகவும், ஜனநாயக விழுமியங்களை வெளிப்படுத்துவனவாகவும் காணப்படுவது தேசத்து மக்களது தேசமகாசபை மீதான நன்மதிப்பைக் காட்டுவன எனலாம்.

கோயிற் பரிபாலன சபையின் அமைப்பு விதி – 8 தேசமகாசபையின் அதிகாரங்கள் பற்றியதாகும். அதாவது அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், விற்றல், குத்தகைக்கு விடல் ஆகியவற்றைத் தீர்மானித்தல், திருவிழாக்கள், பூசைகள் ஆகியன புதிதாக வழங்குதல், மாற்றஞ்செய்தல் பற்றிக் கூறுகின்றன. நிருவாகசபை உறுப்பினர் ஒருவர் அல்லது வண்ணக்கர் ஆலய வளர்ச்சிக்கு மாறாக செயற்படுமிடத்து அல்லது கடமையில் தவறுமிடத்து அவருக்குத் தண்டணை விதித்தல், விலக்குதல், புதிதாகத் தெரிவு செய்த வண்ணக்கர் ஒருவரை ஏற்றுக் கொள்ளுதல் தேசமகாசபையின் அதிகாரங்களிற் சிலவாகும். அத்துடன் வருடாந்த கணக்கறிக்கை, வரவு செலவுத் திட்டம், வருடாந்த அறிக்கை ஆகியனவற்றை பரிசீலனை செய்து, தேசமகாசபைக் கூட்டத்தில் சமுகமளித்திருப்போரின் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே எத்தீர்மானமும் நிறைவேற்றப்படும் எனக் கூறப்படுகின்றது.

தேசமகாசபையின் அதிகாரங்கள் கோயிலின் நிருவாகம், நிதி முகாமைத்துவம், செயற்பாடுகள், அங்கத்துவரின் பிறழ்வான நடத்தைகள் மீது மிகுந்த அவதானத்துடன் கூடிய வகையில் வரையறை செய்யப்பட்டுள்ளமை, கோயிலின் வினைத்திறனான நிருவாக செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

**ஆலய நிருவாக சபை**

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் நிருவாகக் கட்டமைப்பில் ஆலய நிருவாக சபையானது, குடிமுறைசார்ந்த பிரதேசப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு

உருவாக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்திலே கோயிற் திருவிழாவில் பங்கு கொள்ளும் உலகிப்போடிகுடி, காலிங்காகுடி, படையாண்டகுடி, கச்சிலாகுடி, பெத்தாங்குடி, கோப்பிகுடி, சட்டிகுடி, கோயிற் தொண்டூழியர்(பொன்னாச்சி குடி) ஆகிய குடிகளைச் சேர்ந்த எட்டு பகுதியினரிடையே தலா இருவர் வீதம் பதினாறு பேரும், மூன்று வண்ணக்குமாரும் இணைந்து மொத்தம் பத்தொன்பது பேர் கொண்ட நிருவாக சபை உருவாக்கப்பட்டது. தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படாமல் மேற்குறிப்பிட்ட குடிகளைச் சேர்ந்த வண்ணக்கர்களே அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். 1990களில் திகடன்(வேட)குடியைச் சேர்ந்த பரம்பரையினரும் திருவிழாவினை ஏற்று நடாத்தினர். அத்துடன் கோயிற் திருவிழா உரிமை பெற்றிருந்த பணிக்கனார்குடியைச் சேர்ந்தோர் தமக்குரிய திருவிழாவினைச் செய்யவியலாது கைவிட்டிருந்தனர். காலப்போக்கிலே அவர்கள் தமது திருவிழா உரித்தை மீண்டும் 2017 ஆம் ஆண்டு தேசமகாசபையின் அங்கீகாரத்துடன் பெறலாயினர். எனவே தற்காலம் மூன்று வண்ணக்கர்களுடன் கோயிற் திருவிழா உரித்துடைய குடிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருபது உறுப்பினர்களுமாக மொத்தம் இருபத்து மூன்று உறுப்பினர்களுடன் கோயில் நிருவாக சபை இயங்குகின்றமை ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

ஆலய பரிபாலனசபை அமைப்பு விதிகளில் 4ஆம் விதியின் ‘இ’ பகுதியின் 1 – 5 இலக்கங்களும், 9ஆம் விதியின் ‘அ’ பகுதியின் 1 – 3 இலக்கங்களும், ‘ஆ’ பகுதியின் 1 – 9 இலக்கங்களும், ‘இ’ பகுதியின் 1 – 9 இலக்கங்களும், ‘ஈ’ பகுதியின் 1 – 7 இலக்கங்களும் ஆலய நிருவாக சபை பற்றிக் கூறும் நியதிகளாகும்.

ஆலய பரிபாலனசபை அமைப்பு விதிகளில் 4ஆம் விதியின் ‘இ’ பகுதியின் 1 – 5 இலக்கங்கள் ஆலய நிருவாக சபையின் அங்கத்துவம் பற்றிக் கூறுகின்றன. அவற்றிலே, இந்நிருவாகசபை வண்ணக்குமார் மூவரையும், மேற்படி தேவாலயத்தில் திருவிழா உரிமை பெற்றவர்களால் தத்தம் பாகையில் அவர்களால் தெரிவு செய்யப்படும் தலா இருவர் வீதம் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என அமைப்பு விதி கூறுகின்றது. அத்துடன் ஆலயத்தில் ஊதியம்பெறும் எந்தவொரு ஊழியரும் அங்கத்தவராக இருக்கமுடியாது என வரையறை செய்துள்ளது. நிருவாக சபையின் அங்கத்தவர்களில் வண்ணக்குமார் தவிர்ந்த ஏனையோரின் உறுப்புரிமை மூன்று வருடங்களாக இருக்கும் எனவும் தேசமகாசபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு மீண்டும் நிருவாக சபை உறுப்பினராக வரலாம் எனவும் கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடற்குரியது.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் பரிபாலன அமைப்பு விதியில் 9ஆம் விதியின் ‘அ’ பகுதியின் 1 – 3 இலக்கங்கள் நிருவாக சபை அங்கத்தவர்களின் தகைமைகள் பற்றிக் கூறுகின்றன. அவை, 25 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் அவசியம் என்பதனையும் அத்துடன் நல்லொழுக்கமும், நற்குணமும், உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும் எனவும் தேவாலயத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தம்மை அர்ப்பணித்து கருமம் ஆற்றுபவராகவும் இருக்க வேண்டும் என்பதும் விதிமுறைகளாகும். அத்துடன் சமுதாய ஒற்றுமைக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் சமய கலாசாரப் பண்பாட்டிற்கும் சமூக நலனை

மனதிற் கொண்டுழைக்கும் மனப்பான்மையுடையவராகவும் இருக்க வேண்டும் எனவும் கூறுகின்றது.

ஆலய பரிபாலன அமைப்பு விதிகளிலே 9ஆம் விதியின் 'ஆ' பகுதி 1 – 9 இலக்கமிடப்பட்ட விடயங்கள் நிருவாக சபையின் அதிகாரங்கள் பற்றி விபரிக்கின்றன. அவற்றிலே, தேசமகாசபையின் தீர்மானங்களைச் செயற்படுத்துதல், தேவாலயத்தின் சகல கருமங்களையும் திட்டமிட்டு நடாத்துதல் ஆகியவை முதன்மையான அதிகாரங்களாகும். அத்துடன் மேற்படி தேவாலயத்தின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் பணியாளரை நியமித்தல், மாற்றஞ்செய்தல், இடை நிறுத்துதல், தண்டனை வழங்குதல், ஊதியங்களைத் தீர்மானித்து வழங்குதல், நீக்கம் செய்தல் ஆகியவை நிருவாக சபை அதிகாரங்களில் சிலவாகும். இதில் அறவீட்டுக்காரர், தெண்டல் வரிக்காரர் ஆகியோர் கொக்கட்டிச்சோலையிலுள்ள கோயில் தொண்டுழியக் காரராலும், அவர்களது ஊர்ப்போடியாராலும் தெரிவு செய்யப்பட்டு வண்ணக்குமார் மூவரின் சம்மதத்துடன் நியமிக்கப்படுவார்கள் எனவும் கூறப்படுகின்றது. அத்துடன் தேவாலயத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் எனவும் கூறப்படுவதுடன், ஆலயத்தின் நிதிப் பொறுப்பு செலவுகள் ஆகியன நிருவாகசபையின் தீர்மானத்தின் பெயரிலே நடைபெற வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் ஆலய திருத்த வேலைகள், வளர்ச்சிக்காக வேறு வேலைகள் சம்பந்தமான ரூபா ஐயாயிரத்துக்கு(5000/=) மேற்படாத வகையில் செலவினங்களைச் செய்யலாம் எனவும் வரவு செலவுத்திட்டம், வருடாந்த அறிக்கை, கணக்கறிக்கை ஆகியவற்றைத் தயாரித்து தேசமகாசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் அவற்றோடு தொடர்புடைய ஆவணங்கள் ஆகியனவற்றைப் பேணல், பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அவற்றில் இருந்து பெறவேண்டிய வருமானங்களை உரிய காலங்களில் பெறல் முதலியவற்றுடன் வருடாந்த உற்சவங்கள், பூசைகள், விசேட ஆராதனைகள் நடைபெறும் போது தேவாலயத்தின் நடைமுறைகளைச் சிறப்புறக் கவனித்தல் ஆகியவை நிருவாக சபையின் குறிப்பிடத்தக்க அதிகாரங்களாகும்.

பரிபாலன அமைப்பு விதியிலே 9ஆம் விதியின் 'இ' பகுதியின் 1 – 9 இலக்கங்களையுடைய நியமங்கள் நிருவாக சபைக் கூட்டங்கள் பற்றியனவாகும். அந்நியமங்கள் பின்வருமாறு அமைகின்றன. அவற்றின் சாரம்சத்தினை நோக்குகையில், வண்ணக்குமார் இருவர் உட்பட நிருவாக சபை அங்கத்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் சமுகமளித்தால் மட்டுமே நிருவாகசபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும் என வரையறை செய்கின்றது. கூட்டங்கள் மாதம் ஒரு முறை கூட்டப்படுவதுடன், தேவையேற்படும் போதும் விசேட கூட்டமாகக் கூட்டப்படல் வேண்டும் எனவும் விதந்துரைக்கப்படுகின்றது. அத்துடன் தலைவர் அல்லது நிருவாக சபை உறுப்பினர்கள் மூன்றிலொரு பங்கிற்குக் குறையாதவர்கள் எழுத்து மூலம் காரணங்காட்டி கேட்டுக் கொள்ளும் போது கூட்டங்கள் காரியதரிசியால் கூட்டப்படுதல் வேண்டும் எனவும், மாதாந்தக் கூட்டங்களுக்கு ஏழு(7) நாட்கள் முன்னறிவித்தலும், விசேட கூட்டங்களுக்கு மூன்று(3) நாட்கள் முன்னறிவித்தலும் கொடுக்கப்படல் வேண்டும் என வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும், தலைவர் சமுகமளிக்காதவிடத்து தலைவராக தற்காலிக தலைவர் ஒருவர்

கடமையாற்றுவார் என்றும், எல்லா அங்கத்தவர்களும் கூட்டங்களுக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும், தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு நியாயமான காரணமின்றி சமுகமளிக்கத் தவறுபவர்கள் தாமாகவே தமது அங்கத்துவ உரிமையை இழந்தவராகக் கருதப்படுவார் என்றும் கூறப்படுவதுடன், அடுத்துவரும் தேசமகா சபையில் உரியவர்களால் தெரிவு செய்யப்பட்டு அவ்விடம் நிரப்பப்படும் என்ற விபரிப்பும் காணப்படுகின்றது. கூட்டத்திற்கு சமுகமளித்திருப்போரில் பெரும்பான்மையினரின் அங்கீகாரத்தின் பேரிலே தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் எனவும் வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோயிற் பரிபாலன அமைப்பின் 9ஆம் விதியின் ‘ஈ’ பகுதியில் 1 – 7 இலக்கங்கள் நிருவாக சபையில் அங்கத்துவம் பெறும் உறுப்பினர்களின் உறுப்புரிமை இழத்தல் தொடர்பானவையாகும். அவற்றிலே, பொறுப்பற்ற முறையில் நடத்தல், ஆலய வளர்ச்சிக்கும், நிருவாக நடைமுறைகளுக்கும் முட்டுக்கட்டையாக இருத்தல், சபையின் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின் அதற்கு எதிரிடையான முயற்சிகள் எதிலும் பங்கு கொள்ளல் முதலிய செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளன. வேறு சமயத்தைத் தழுவிக் கொள்ளல், பொதுச்சபையால் விலக்கப்படுதல், தாமாகவே விலகிக் கொள்வதாக எழுத்து மூலம் அறிவித்தல், நிருவாகசபைக் கூட்டங்களில் ஒழுக்கக் கேடாக நடந்து கொள்ளுதல், தகாத வார்த்தைகள் பேசுதல் ஆகிய காரணங்களின் நிமித்தம் அங்கத்தவர் ஒருவர் நிருவாகசபை உறுப்புரிமையை இழப்பார் எனக் கூறப்படுகின்றது.

ஈண்டு கோயில் நிருவாக சபையின் கட்டமைப்பு மிகுந்த அவதானத்திற்குரியதாகின்றது. கோயிலின் அனைத்து செயற்பாடுகளுக்கும் இந்நிருவாக கட்டமைப்பே ஆதாரமாகக் காணப்படுகின்றது.

**வண்ணக்குமார் குழு**

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் மரபு வழியானதும், மாற்றமடையாததுமான கோயிற் பரிபாலனத்தில் வண்ணக்குமார் குழு பிரசித்தமானது. இது பரிபாலன சபை அமைப்பு விதிகளால் அங்கீகாரம் பெற்ற ஒரு கோயில் நிருவாக முறைமையாகக் காணப்படுகின்றது. 4ஆம் விதியின் ‘ஈ’ பகுதி வண்ணக்குமார் குழுவின் அங்கத்தவர்கள் பற்றியதாகும். பாரம்பரிய உரிமைப்படி காலிங்காகுடி, உலகிப்போடிகுடி, படையாண்டகுடி ஆகியவற்றினைச் சேர்ந்தவர்களினால் தெரிவு செய்யப்படும் மூன்று வண்ணக்குமாரும் இதில் அடங்குவர். மேலும் பரிபாலன சபை அமைப்பின் 5ஆம் விதியின் ‘அ’ பகுதி 1 – 6, ‘ஆ’ பகுதி 1 - 2, ‘இ’ பகுதி 1 – 4, ‘ஈ’ 1 – 2, 6ஆம் விதி, 10ஆம் விதியின் ‘அ’ பகுதி 1 – 2, ‘ஆ’ பகுதி 1 – 3, ‘இ’ பகுதி 1 -3, ‘ஈ’ பகுதி 1-4 ஆகிய இலக்கங்கள் வண்ணக்குமார் குழு பற்றிக் கூறுகின்றன.

பரிபாலன அமைப்பின் 5ஆம் விதியின் ‘அ’ பகுதி வண்ணக்கர் குழுவின் தலைவர் பற்றிக் கூறுகின்றது. இவற்றினை பின்வருமாறு விபரிக்கலாம். காலிங்காகுடி வண்ணக்கரே தேசமகாசபைக்கு தலைவராக இருப்பார் என்றும், அன்பு, அறிவு, அடக்கம், பொறுமை, புத்திசாதுரியம், கண்ணியம், கட்டுப்பாடு என்பன நிரம்பப் பெற்றவராக இருக்க வேண்டும் என்பது

நியதியாகும். அத்துடன் கூட்டத்தில் தகாத வார்த்தைகள், குழப்பங்கள் ஏற்பட்டால் உடனே தலையிட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் கூறப்படுகின்றது. கூட்டத்தில் பங்குபற்றியுள்ளோர், தகுதியற்றோர், அமைதியற்றோர், எனக்கண்டால் அவர்களைக் கூட்டத்தில் இருந்து வெளியேற்றத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. கூட்டம் நடத்த முடியாதெனக் கண்டால் கூட்டத்தைக் கலைத்துவிடவும், ஒத்திப்போடவும் தலைவருக்கு அதிகாரம் உண்டு என்பதுடன், கூட்டத்தைத் திறம்பட நடத்துவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் தலைவரே மேற்கொள்வார் எனவும் கூறப்படுகின்றது.

பரிபாலன அமைப்பின் 5ஆம் விதியின் 'ஆ' பகுதி 1, 2 இலக்கங்கள் காரியதரிசி(செயலாளர்) பற்றிக் கூறுகின்றன. அதாவது தேசமகாசபைக் கூட்டத்திற்கு காரியதரிசியாகப் படையாண்டகுடி வண்ணக்கரே இருப்பார் எனவும், அவர் நற்குணம், நல்லொழுக்கம், திறமை ஆகிய பண்புடையவராக இருப்பார் எனவும், கூறப்படுவதுடன், 5ஆம் விதியின் 'இ' பகுதியில் 1 - 4 இலக்கங்கள் காரியதரிசியின்(செயலாளர்) கடமைகள் பற்றி விபரிக்கின்றன. காரியதரிசியின் கடமைகளாவன, தேசமகாசபையினதும், நிருவாக சபையினதும் கூட்டங்களுக்கறிவித்தல், கூட்டக்குறிப்புக்களை முறையாக அவ்வப்போது எழுதி பாதுகாப்பாக வைத்தல், கூட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவற்றை மேற்கொள்ளல், கூட்டக்குறிப்புப் புத்தகங்கள், கடிதங்கள், மற்றும் அவையோடு தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் முதலியனவாகும். அத்துடன் 5ஆம் விதியின் 'ஈ' பகுதியின் 1, 2 இலக்கங்கள் பொருளாளர் பற்றியனவாக அமைகின்றன. பொருளாளர், உலகிப்போடிகுடி வண்ணக்கரே மேற்படி ஆலய பரிபாலன சபை அமைப்பின்படி இருப்பார் என்றும் அவர் நல்லொழுக்கம், திறமை, நற்குணம், ஆகிய பண்புகளை உடையவராக இருப்பார் என்றும் கூறப்பட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

கோயிற்பரிபாலன அமைப்பின் 6ஆம் விதி, 5ஆம் விதியிற் கூறப்பட்ட தலைவர், காரியதரிசி, பொருளாளர் ஆகியோரே ஆலய நிருவாக சபையின் மேற்படி பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களாகவும் கடமையாற்றுவார்கள் எனக்கூறப்படுகின்றது. அத்துடன் இவர்களது பதவிக்காலம் வரையறையற்றது என்பதும் மிகுந்த கவனத்தைப் பெறுகின்றது எனலாம்.

வண்ணக்குமார் குழு பற்றிய விபரங்களில் 10ஆம் விதியின் 'அ' பகுதியின் இலக்கங்கள் 1, 2 ஆகியவை வண்ணக்குமார் குழுவின் தகைமைகள் பற்றிக் கூறுகின்றன. கோயில் வண்ணக்கர்கள் தமிழ் நன்றாக எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் எனவும், அவர்களது கடமையோடு தொடர்புடைய ஆலய வழமைகள் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் எனவும் கூறுகின்றது. 10ஆம் விதியின் 'ஆ' பகுதி வண்ணக்குமார் நியமனம் தொடர்பானவை ஆகும். அவை 1 – 3 இலக்கங்களால் குறிப்பிடப்படுகின்றன. அவற்றின் வியாக்கியானம், பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பே வண்ணக்கர் ஒருவரின் நியமனம் நடைமுறைக்கு வரும் எனவும் வண்ணக்கர் ஒருவர் விலகினால் அல்லது இறந்தால் அவரது இடத்திற்கு வேறு ஒருவர் ஆகக் கூடியது ஒரு மாத காலத்திற்குள் நியமிக்கப்பட வேண்டும் என்பது அமைப்பு விதியாகும். அவ்விதியில் மேலும் வண்ணக்கர் ஒருவரின் தெரிவினை ஏற்றுக்

கொள்வதற்காகத் தமக்குத் தெரிவு பற்றிய அறிவித்தல் கிடைத்து பதினைந்து நாட்களுக்குள் காரியதரிசி தேசமகாசபையின் விசேட கூட்டத்தினைக் கூட்ட வேண்டும் எனவும் விபரிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட 10ஆம் விதியின் 'இ' பகுதி வண்ணக்கர் உறுப்புரிமையை இழத்தல் தொடர்பானது. அதாவது வண்ணக்கர் ஒருவர் தமது உறுப்புரிமையை, ஆலய வளர்ச்சிக்கு எதிரிடையாக இருத்தல், கடமையில் தவறுதல், ஒரு மாத கால முன்னறிவித்தலுடன் விலகிக் கொள்ளுதல் ஆகிய காரணங்களால் இழக்க நேரிடும் எனக் கூறப்படுகின்றது. அத்துடன் 10ஆம் விதியின் 'ஈ' பகுதி வண்ணக்குமார் குழுவின் அதிகாரங்கள் பற்றியது. தேவாலயத்தின் சகல காரியங்களையும் முன்னின்று நடாத்துதல், தேவாலயத்தில் நடைபெறும் சகல கருமங்களிலும் பங்குபற்றுவதோடு, பண்டு பரவணியாகவுள்ள ஆலயத்திருப்பணி வேலைகள் மற்றும் சகல வேலைகள் சம்பந்தமாக நிருவாக சபையினரும், தேசமகா சபையினரும் தீர்மானத்தின் படி நடந்து கொள்ள வேண்டும். மற்றும் நிருவாக சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளை மாத்திரம் தனித்தும், ஒருமித்தும் செய்து நிறைவேற்றி வைத்தல் ஆகியவை வண்ணக்கர்களின் அதிகாரங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன.

**கோயிலுக்கு உரித்துடைய குடிகளின் நிருவாகமுறை**

மேற்குறிப்பிட்ட 1978ஆம் தேசமகா சபையில் அங்கீகரிக்கப்பட்ட கோயில் பரிபாலன அமைப்பு விதிகளுக்குப் புறநடையாக, கோயிற் திருவிழாவின் உரிமைப் பங்கீட்டாளர்களான காலிங்காகுடி, படையாட்சிகுடி, உலகிப்போடிகுடி, கச்சிலாகுடி, பெத்தான்குடி, கோப்பிகுடி, சட்டிகுடி, பணிக்கனார்குடி, திகடன்குடி, பொன்னாச்சிகுடி ஆகிய குடிகளைச் சேர்ந்த மக்கள் கோயிலுடன் தொடர்புடைய செயற்கருமங்களுக்காகத் தத்தமது குடி சார்ந்து ஏழு நிருவாக சபையினை உருவாக்கியுள்ளார்கள். தேசத்து மகாசபைக்கும், கோயில் நிருவாக சபைக்கும், வண்ணக்குமாரின் நியமனத்திற்கும் தமது குடி சார்ந்தவர்களைப் பிரதிநிதிகளாக அனுப்புவதே குடிகளின் நிருவாக முறையின் பிரதான நோக்கமாகும். அத்துடன் தமது குடிக்கு வழங்கப்பட்டுள்ள கோயிற் திருவிழாவினைச் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் செய்ய வேண்டும் என போட்டி மனப்பாங்குடன் ஒவ்வொரு குடியைச் சேர்ந்தவர்களும் செயற்படும் விதம் கவனத்திற்குரியது.

ஒவ்வொரு குடியும் தலைவர், செயலாளர், பொருளாளர், நிருவாக உறுப்பினர்கள் என தமது நிருவாக சபையினை தாபித்துள்ளார்கள். அப்பதவி ஒரே ஊரினை மையப்படுத்தி வழங்கப்படாமல் தமது கோயிற் திருவிழாவிற்கு உரித்துடையவர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்வார்கள். தற்காலம் இந்த நடைமுறை மண்முனை, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்கின்ற மேற்குறிப்பிட்ட சமுதாயத்தினரை மாத்திரம் கொண்ட அமைப்பாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆய்வு முடிவும் கலந்துரையாடலும்**

தேசத்துக் கோயில், திருப்படைக் கோயில் என்ற கருத்தியல்கள் இரண்டும் வெவ்வேறானவை. தேசத்துக்கோயில்கள், கருவறையில் இலிங்கத்தையும், வேலினையும் வைத்து வழிபடும் சிவன், முருகன் கோயில்களாகும். திருப்படைக் கோயில்கள் கருவறையில் வேலினை மாத்திரம் வைத்து வழிபடும் முருகன் கோயில்களாகும்.

கிழக்கிலங்கையின் தேசத்துக் கோயில்களில் மரபு வழியான வழமைகள் வழக்கிலுள்ள மிகப்புராதன கோயிலாகக் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இக்கோயிலின் நிருவாக முறைமை பண்டு தொட்டு ஒரு கட்டுக்கோப்பான முறையில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. ஆரம்ப காலக் கோயில் பரிபாலனத்தில் தேசத்து வன்னிமைகள் முதன்மையான இடத்தினை வகித்திருக்கின்றார்கள். காலவோட்டத்தில் நிருவாகத்தில் அவர்கள் தங்களின் செல்வாக்கை இழந்தமை ஆய்வில் புலப்படுகின்றது. உரிமைப் பங்கீட்டில் முற்குகர்களுக்கும் வேளாளர்களுக்கும் இடையிலுண்டான தகராறுகள் காரணமாக அவர்கள் கோயிலின் நிருவாகத்தில் இருந்து தாமாகவே விலகிக் கொண்டமை கண்டறியப்பட்டுள்ளது.

தேசத்துக் கோயில்கள் பொதுவாக மட்டக்களப்பு தேசத்திலுள்ள அனைத்துச் சாதிகளுக்கும் உரியது என்பார் க.மகேஸ்வரலிங்கம். அவரது கருத்தை அடிப்படையாக வைத்து நோக்குகையில், கோயில் திருவிழா பங்கீட்டு முறைமையிலும், நிருவாகக் கட்டமைப்பிலும் அவற்றினைக் காணமுடியவில்லை. கோயிலின் வருடாந்த திருவிழா முற்குகரையும், கோயில் தொண்டூழியம் புரிபவர்களைத் தவிர மட்டக்களப்பிலுள்ள ஏனைய சாதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. பன்னெடுங் காலமாகக் கோயிலின் நிருவாகத்தினையும், திருவிழா உரிமையினையும் முற்குகர் தம்வசம் வைத்துள்ளனர். தற்கால கோயில் நிருவாகிகளில் பெரும்பான்மையானோர் கோயில் அமைந்துள்ள பிரதேச செயலக நிருவாக எல்லைக்குரியவர்கள். முற்காலங்களில் ஏறாவூரைச் சேர்ந்த க.மயிலிப்போடி,(காலிங்காகுடி) சி.கதிராமத்தம்பிப்போடி(படையாண்டகுடி) ஆகிய இரு வண்ணக்கர்களும் முறையே தலைவராகவும், செயலாளராகவும் பதவி வகித்துள்ளார்கள். இருப்பினும் பிற்கால நிருவாகங்களில் இவ்வாறான பதிவுகளைக் காணமுடியவில்லை. இது தொடர்பாக தகவலாளியிடம் ஆய்வாளர் வினவிய போது, அதற்கு அவர், உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலத்தில் கோயில் நிருவாகம் தொடர்பான கூட்டங்களிலே மட்டக்களப்பு தேசத்தின் ஏனைய பிரதேச மக்களின் பங்குபற்றுதல் குறைவாக இருந்தமை பற்றிச் சுட்டிக்காட்டினார்.

கோயிலின் நிருவாகக் கட்டமைப்புக்களாகிய தேசமகாசபை, கோயில் நிருவாகசபை, வண்ணக்குமார் குழு என்பன வண்ணக்கர்களின் அதிகாரக் குவிமையமாகவே விளங்குகின்றன எனலாம். மேற்குறித்த மூன்று கட்டமைப்பிலும் காலிங்காகுடி, படையாட்சிகுடி, உலகிப்போடிகுடி ஆகிய குடிகளின் பிரதிநிதித்துவ முக்கியத்துவம் அமைப்பு விதிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் வண்ணக்கர் நியமனம் தொடர்பாக, சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில், கோயிற் போரதீவு சித்திர வேலாயுதர் கோயில் முதலிய கோயில்களில் காணப்படுவது போன்று சட்ட ரீதியான அங்கீகரிக்கப்பட்ட அரச ஆவணம் எதனையும் இங்கு காணமுடியவில்லை.

கோயிலின் நிருவாகமுறை அமைப்பு விதிகளால் உறுதிப்படுத்தப்பட்டவை ஆகும். அது எழுத்தாவணமாகக் காணப்படுவதனால் மிக உறுதியான நிருவாகக் கட்டமைப்பிற்கு வழிகோலியுள்ளது எனலாம். 24.09.1978 ஆண்டு தேச மகாசபையில் அங்கீகரிக்கப்பட்ட கோயில் பரிபாலன அமைப்பு விதிகளில் 13ஆம் விதி அமைப்பு சீர்திருத்தம் பற்றியதாகும். சீர்திருத்தத்திற்குரிய விதி அமைப்பில் இருந்த போதும் காலத்திற்கேற்ற மாற்றங்களைக் காணமுடியவில்லை.

கோயிலின் தொண்டுயழித்திற்காக ஊதியம் பெறும் எவரும் கோயில் நிருவாக சபையில் அங்கத்தும் பெற முடியாது என்பது அமைப்பு விதிகளில் ஒன்று. இவ்விதி கோயில் தொண்டுழியம் புரியும் மக்களுக்கு நிருவாக சபையில் அங்கத்துவம் பெறுவதற்கான வாய்ப்பை இழக்கச்செய்கின்றது.

கோயில் அமைப்பு விதிகளில் நிருவாகத் தெரிவில் பாலின வேறுபாடுகளைக் காணமுடியவில்லை. இருப்பினும் நிருவாகக் கட்டமைப்புக்களில் பெண்களின் பங்குபற்றுதல் அரிதான நிலையிலேயே காணத்தக்கது. முற்காலத்தில் இதற்குப் புறநடையாக உலகிப்போடிகுடி வண்ணக்கராக கன்னன்குடாவைச் சேர்ந்த கதிராமப்போடி உமையாத்தை என்பவர் பணியாற்றியுள்ளமை கோயிற் குறிப்பு ஒன்றினால் அறியமுடிகின்றது. மரபுகளையும், சம்பிரதாயங்களையும் பேணிப்பாதுகாக்கும் அக்கால இறுக்கமான சூழலில் வண்ணக்கர்களில் பெண் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்பட்டமை சிந்திக்கத் தூண்டுவனவாகும். அந்நியமனத்தின் பின்புலத்திலே அரசியல், பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை ஆய்விற் தெளிவாகின்றது.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் மேலாண்மையில் முற்குகர் என்னும் சமூகப் பிரிவினர், தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள கையாண்ட செயற்படு இயங்கு விசையாகவே வண்ணக்கர்கள் சார்ந்த நிருவாகக் கட்டமைப்பு காணப்படுகின்றது.

**பரிந்துரை**

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்தின் நிருவாக முறைமை தொடர்பான ஆய்வு முடிவின் பிரகாரம் அதன் நிருவாக முறைமையில், பழமையும்,மரபும் மாற்றமடையாத வகையில் நிருவாகக் கட்டமைப்பில் முற்குக சமூகத்தைச் சார்ந்த ஏனைய ஊரவர்களையும் இணைத்துக்கொள்ளுவது பற்றி மீள்பரிசீலனை செய்ய முடியும். கோயில் நன்கொடைகளும், தேவ தானங்களும் அதிகம் என்பதனால் கோயில் பரிபாலன அமைப்பு விதிகளில் மாற்றம் செய்து, கோயில் நிருவாக சபைக் கட்டமைப்பில் கணக்குப் பரிசோதகர் என்ற புதிய பதவியொன்றினை உருவாக்கலாம். ஏற்கனவே பெண் ஒருவர் வண்ணக்கராக தெரிவு செய்யப்பட்டு பணியாற்றியுள்ளமையினால் நிருவாகத்தில்

பெண்களுக்கு இடமளிக்கப்படலாம். யாப்பில் சீர்திருத்த ஏற்பாடுகள் உள்ளமையினால் மரபுகளும், வழமைகளும் மாறாத வகையில் காலத்திற்கு ஏற்ப நிருவாகக் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்யலாம். திருவிழா உரிமை வழங்கப்பட்டு ஊதியம் பெறும் கோயில் தொழும்பாளர்களுக்கு நிருவாக அங்கத்துவம் பற்றி மீள்பரிசீலனை செய்யமுடியும். தேசத்து வன்னிமைகளின் நினைவாக கோயில் சம்பிரதாயங்களில் காணத்தக்க விடயங்களை பேணிப்பாதுகாப்பது அவசியமாகும்.

**(அ) உசாத்துணை நூல்கள்**

**தமிழ் நூல்கள்**

கந்தையா, வி.சி., (1997) *மட்டக்களப்புச் சைவக் கோயில்கள்,* இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

கமலநாதன்,சா.இ.,(பதி.) (2005) *மட்டக்களப்புப் பூர்வசரித்திரம்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கோபாலசிங்கம், சி., (2007) *மலையாள நாடும் மட்டக்களப்பும்*, ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.

சித்திரலேகா, மௌ.,(பதி.) (2004) *வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக,* மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

சிவசண்முகம், ஞா., (2000) *மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும்,* விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

தங்கேஸ்வரி, க., (1993) *குளக்கோட்டன் தரிசனம்*, அன்பு வெளியீடு, மட்டக்களப்பு.

…………………, (1995) *கலிங்க மாகோன் வரலாறு*, அன்பு வெளியீடு, மட்டக்களப்பு.

…………………., (2008) *கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்*, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

நடராசா,எப்.எக்ஸ்.சி.,(பதி.) (1980) *மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்*, இந்து வாலிபர் முன்னணி, மட்டக்களப்பு.

……………….,(பதி.) (1998) *மட்டக்களப்பு மான்மியம்*, கலாசாரப் பேரவை, மட்டக்களப்பு.

பத்மநாதன்.சி.,(பதி.) (1994) *இலங்கையின் இந்துக் கோயில்கள்-01*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

…………………….., (2000) *இலங்கையில் இந்துக் கலாசாரம்,* இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

……………………..., (2002) *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும், சமூக வழமைகளும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

…………………….., (2003) *இலங்கையில் வன்னியர்*, குமரன் புத்தக நிலையம், கொழும்பு-சென்னை.

………………………., (2004) *ஈழத்து இலக்கியமும் வரலாறும்*, குமரன் புத்தக நிலையம், கொழும்பு-சென்னை.

மகேஸ்வரலிங்கம், க., (2008) *மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்*, கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

மயிலை சீனி.வேங்கடசாமி.இ (1989) *சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள்,* சென்னை.

மௌனகுரு, சி.,(பதி.) (2003) *மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு*, இரண்டாம் உலக இந்துமாநாடு மட்டக்களப்புப் பிரதேசக்கிளை, மட்டக்களப்பு.

வடிவேல்,இ.,(பதி.), (2000) *வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்,* இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

**ஆங்கில நூல்**

Mahadeva,I., ( 2014) ***Early Tamil Epigraphy,*** Central Institute of Classical, Chennai

**(ஆ) கும்பாவிஷேக மலர்**

*தேரோட்டம்,* (1998) கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சர கும்பாபிஷேக சிறப்பு மலர்.

**(இ) தமிழ் அகராதிகள்**

1. *நர்மதாவின் தமிழ் அகராதி*, (2013) நர்மதா பதிப்பகம், சென்னை.
2. *தமிழ்ப் பேரகரமுதலி*, (1920)சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**(ஈ) தகவல் வழங்கியோர் விபரம்**

1. *திரு.பொ.நேசதுரை*, ஓய்வு பெற்ற அதிபர், வயது - 62, மகிழடித்தீவு, 18.09.2021
2. *திரு.அ.இராசதுரை*, முன்னாள் வண்ணக்கர்(காலிங்காகுடி) வயது - 88, அரசடித்தீவு, 19.08.2021
3. *திரு.செ.தில்லைக்கூத்தன்*, பட்டதாரி ஆசிரியர், வயது 46, அரசடித் தீவு, 23.09.2021.
4. *திரு.ச.தங்கவேல்,* சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், வயது 48, முதலைக்குடா, 26.09.2021.
5. *திரு.சு.திபாகரன்*, முகாமைத்துவ உதவியாளர், வயது 41, அரசடித்தீவு, 19.09.2021